பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 23 சனிக்கிழமை 09.11.2024 கதிர் 002

## இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததில் இருந்து அதிகம் பாதிக்கப்படுவது இந்தியாவாகத்தான் இருக்கின்றது. ஏற்கனவே மன்னாரில் அதானி நிறுவனத்திற்குக் கொடுப்பதற்கு இணங்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி ☞ 2

# ஆட்சியாளர்கள் மூவருமே இருட்டில் துளாவுகின்றனர்

## ரோஸி சேனநாயக்க விமர்சனம்

கடன் பெற்றும் பணம் அச்சிட்டும்தான் நாட்டை கொண்டுசெல்வதாக இருந்தால் அதற்கு ஆளும்தரப்பு என்று ஒன்று எதற்கு என கேட்ட அநுரகுமார திசநாயக்க, அதிகாரத்துக்கு வந்து ஒரு கிழமையில் வரலாற்றில் யாரும் பெற்றுக்கொள்ளாத கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளார். இலங்கையை அபிவிருத்தி செய்யும் திட்டம் எதுவும் இவர்களிடம் இல்லை. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் என்று மூ-வருமே இருட்டில் துளாவி வருகின்றனர் என்று புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமந்துள்ள புதிய ஜன நாயக முன்னணி தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசநாயக்க மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நம்பியே மக்கள் அலை ஒன்றுஏற்பட்டு அநுரகுமாரதிஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கியது. ஆனால் புதிய ஆட்சி அமைந்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் வேலைத்திட்டங்களைப் பார்த்து மக்கள் அவர்களிடம் கேள்வி கேட்கும் நிலை ☞ 2



## வாக்களிப்பது எப்படி?

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பது எப்படி என்று ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க விளக்கியுள்ளார்.

பொதுத்தோதலில் வாக்களிப்பது தொடர்பில் தெளிவுபடுத்தும்போது அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

தபால் மூல வாக்களிப்பும், வாக்கு சீட்டு விநியோகமும் நிறைவடைந்துள்ளன. வாக்குச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். சகல பரப்புரை நடவடிக்கைகளும் நவம்பர் 11 நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது. ☞ 2

## தபால்மூல வாக்களிப்பு நேற்று நிறைவு

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுடன் நிறைவடைந்தது.

ஒக்டோபர் 30, நவம்பர் 1 மற்றும் 4 ஆகிய நாள்களில் தபால் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்காக நேற்றுச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்திருந்தார்.

தேர்தல் ஆணைக்குழு ☞ 2

## வெதுப்பக உற்பத்திகளின் விலைச் சரிப்பில் கவனம்

ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளமைக்கு இணையாக வெதுப்பகத் தயாரிப்புகள் மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு உற்பத்திகளின் விலை குறைப்பு வீதம் தொடர்பில் பொதுமக்களால் நுகர்வோர் விவகார அதிகார சபையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. ☞ 8

## புதிய காற்றழுத்தம் உருவாகின்றது

வங்காள விரிகுடாவில் அடுத்த 48 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகின்றது.

எதிர்வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இந்த புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி தமிழ்நாட்டின் பல பகுதிகள் மற்றும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை நோக்கி நகரும் என சென்னை ☞ 8

தமிழ் அரசுக் கட்சியிடம்

## அதிக எம்.பி. பதவிகள் இருந்தால் பேரம் பேசும் சக்தியாக மாறலாம்

சாணக்கியன் விளக்கம்

எம்மிடம் அதிக நாடாளுமன்ற ஆசனங்கள் இருந்தால் ஆளும்தரப்-புடன் பேரம்பேசும் சக்தியாகத் தமிழ் அரசுக் கட்சி மாறும் என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுதாவளையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

பொருளாதார வளர்ச்சியை 5 வீதமாக்க

## தெரியுமென்றால் செய்யுங்கள் தெரியாவிட்டால் கேளுங்கள்

தாத்தா ரணில் எகத்தாளம்

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் பொருளாதார வளர்ச்சியை அடுத்த வருடத்தில் 5 சதவீதமாக அதிகரிக்க முடியும். அது தெரிந்தால் அதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். தெரியாவிட்டால் என்னிடம் கேட்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய ☞ 2

## ரூ. 800 கோடியை மோசடி செய்த சந்தேகநபரும் மனைவியும் கைது


800 கோடி ரூபாயை மோசடி செய்து நாட்டிலிருந்து தப்பிச்சென்ற நபர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ☞ 8

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!

ஊழலற்ற தூய கரங்கள்!!






சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிலையத்துக்கான அனுமதி தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இப்போது மத்தல விமான நிலையத்தையும் இந்தியநிறுவனத்திடம்கொடுக்கப்போவதில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மத்தல விமான நிலையத்தின் முகாமைத்துவத்தினை இந்திய இலங்கை கூட்டுமுயற்சியிடம்ஒப்படைக்கும்முன்னைய ஆளும்தரப்பின் திட்டத்தினை தற்போதைய ஆளும்தரப்புக் கைவிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்டத்தடைகளை மீறி இந்திய ரஷ்ய கூட்டுமுயற்சிக்கு அனுமதிவழங்க இலங்கை அதிகாரிகள் தயாராக இல்லை என்பதால் இந்ததிட்டம் கைவிடப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னைய ஆளும்தரப்பு மத்தல விமான நிலையத்தினை நிர்வகிக்கும் பொறுப்பை இந்தியாவின் சௌர்யா ஏரோநோட்டிக்ஸ் மற்றும் ரஷ்யாவின் எயர்போஜுர்ட் ஒவ் ரீஜன்சிடம் கையளிக்கத் தீர்மானித்தது.

இதற்கு அனுமதிவழங்குவதற்காக உடன்படிக்கையின்நகல்வடிவத்தினைசட்டமா அதிபர்திணைக்களத்திற்குஅனுப்பியிருந்தனர். எனினும் இலங்கையில் விமானநிலைய போக்குவரத்து அதிகாரசபைக்கு மாத்திரமே விமானநிலையங்களை முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் உள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதையடுத்து இலங்கை ஆளும்தரப்பு மத்தல விமானநிலையத்தின் முகாமைத் துவத்தினை வெளிநாட்டு நிறுவனங்களிடம் கையளிக்க தயாரில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுவும் தவிர, குறிப்பிட்ட நிறுவனங்கள் இந்தத் திட்டத்தினை முன்னெடுக்க விரும்பவில்லை, இது குறித்து இலங்கை ஆளும்தரப்பிடம் நீண்டகாலமாக தொடர்புகொள்ளவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆட்சியாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது. ஆளும்தரப்பு மீது மக்களுக்கு விரக்தி ஏற்பட்டுள்ளது

நாட்டின் கடன் தொகையான 41 பில்லியன் டொலரை செலுத்துவது பெரிய விடயம் அல்ல என அநுரகுமார திசநாயக்க அன்று தெரிவித்திருந்தார். அதேபோன்று பணம் அச்சிட்டும் கடன் பெற்றும் நாட்டை கட்டியெழுப்ப ஆளும்தரப்பு ஒன்று எதற்கு எனவும் அவர் கேட்டிருந்தார்.

எரிபொருள் இறக்குமதியில் அமைச்சருக்கு தரகுப்பணம் செல்வதாகவும் அந்தப் பணத்தை இல்லாமல் செய்து, எரிபொருள் விலையை குறைப்பதாகவும் தெரிவித்தார். அரச சொத்துக்களை திருடியவர்களை 24 மணி நேரத்துக்குள் சிறையில் அடைப்பார் என்று தெரிவித்தார். இவ்வாறு பல்வேறு வாக்குறுதிகளை அவர் வழங்கி இருந்தார். ஆனால் இந்த வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றி இருக்கிறாரா எனக் கேட்கிறேன்.

கடன் பெறுவதில்லை எனத் தெரிவித்த இவர்கள், வரலாற்றில் யாரும் பெறாத கடன் தொகையை தாம் பொறுப்பெடுத்த ஒரே வாரத்துக்குள் பெற்றுள்ளார்கள். பணம் அச்சிட்டுள்ளனர்.

அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டாலும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இவர்களிடம் எந்தத் திட்டமும் இல்லை. அதேபோன்று நாட்டை அபிவிருத்தி செய்யவும் இவர்களிடம் வேலைத்திட்டம் இல்லை. அவ்வாறு இருந்தால் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

மேலும் ஆளும்தரப்பின் வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். அப்படியானால் அந்த வேலைத்திட்டங்களையும் அதனை எப்போது ஆரம்பிப்பது என்ற திட்டத்தையும் நாட்டுக்குச் சொல்லவேண்டும்.

நாட்டை அபிவிருத்தி செய்ய எந்த திட்டமிடலும் இல்லாமலேயே இவர்கள் தேர்தலுக்கு முகம்கொடுத்துள்ளனர். அதனால் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகிய மூன்றுபேரும் இருளில் துழாவிக்கொண்டு, ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றனர் என்றார்.

## தெரியுமென்றால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளா.

காலியில் இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியாளர்களைப் போன்று செயற்படுவதாக தெரியவில்லை. இன்னும் அவர்களுக்கு அந்த எண்ணம் வரவில்லை. என்ன கூறி அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்கள் என்பதைப் பற்றி தற்போது பேசுவதாக தெரியவில்லை. இன்னும் எதிர்த் தரப்பில் இருப்பது போன்றே செயற்படுகிறார்கள்.

என்ன திருட்டுகள் இடம்பெற்றன? 1இற்கு 6 என்ற வீதத்தை கொடுக்காமல் இருக்கிறீர்கள்? 2024இல் 15,000 ரூபாயைக் கொடுப்பார்களா? என்பதை ஜனாதிபதி கூறவேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் அமைதி காப்பது பொருத்தமற்றது.

இவை தொடர்பில் வேலைத்திட்டமொன்று இருக்க வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் தேசிய மக்கள் சக்திக்காகவே செயலாற்றினார்கள். தேசிய மக்கள் சக்தியை நம்பினார்கள். ஆட்சியாளர்களோ அவர்களை மறந்து விட்டார்கள். அந்தக் காலப்பகுதியில் செயற்பட்ட தொழிற்சங்கங்களை இன்று காண்பதற்கு இல்லை. அந்த தொழிற்சங்கங்களின் தலைவர் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். எனவே, 20,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை கொடுப்பார்களா என்பதை அரச உத்தியோகத்தர்களே கோரவேண்டும்.

உயர் அதிகரிகளை ஏன் இவ்வாறு கீழிறக்குகிறார்கள். அவர்கள் தொடர்பிலும் தீர்மானங்கள் எடுக்கவேண்டும். அவர்கள் தனியார் துறைக்குச் சென்றால் அவர்களால் 5 - 10 இலட்சம் ரூபா வரையில் உழைக்க முடியும். ஏன் அவர்களுக்கு எதிராகச் செயற்படுகிறார்கள்.

நாங்கள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தினோம். 2024ஆம் ஆண்டில் எமது பொருளாதார வளர்ச்சியை 3 சதவீதத்தால அதிகரிப்போம் என்று நாணய நிதியத்துக்கு அறிவித்திருந்தோம். ஆனால் இன்று 4.4 சதவீதத்தை அடைந்துள்ளோம். அடுத்த வருடத்தில் 5 சதவீதத்தை அடைய முடியும். அது தெரிந்தால் அந்த பணிகளை முன்னெடுக்க வேண்டும். தெரியாவிட்டால் இந்த தாத்தாவிடம் கேட்கவேண்டும் என்றார்.

## வாக்களிப்பது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் அமைதிக் காலமாகும். இக்காலப் பகுதியில் பரப்புரைகளை முன்னெடுக்க முடியாது.

அத்தோடு வேட்பாளர்களின் தேர்தல் அலுவலகங்கள் நவம்பர் 12 நள்ளிரவுடன் அப்புறப்படுத்தப்படவேண்டும். இம்முறை இருவகையான வாக்குசீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. பொலன்னறுவை, மொனராகலை, கேகாலை மாவட்டங்களுக்கு ஒரே நிரலிலான வாக்கு சீட்டுக்கள் விநியோகிகப்படும். ஏனைய 19 மாவட்டங்களுக்கும் இரு நிரல்களைக் கொண்ட வாக்குசீட்டுக்கள் விநியோகிகப்படும்.

வாக்களிக்கும்போது தாம் தெரிவுசெய்யும் கட்சி சின்னத்துக்கு அல்லது சுயாதீன குழுவுக்கு அருகில் புள்ளடியிடவேண்டும். அவ்வாறு புள்ளடியிடப்படாத வாக்குசீட்டுக்கள் நிராகரிக்கப்படும். அதன் பின்னர் தமது விருப்பத்தெரிவான வேட்பாளரது இலக்கத்துக்கு புள்ளடியிட வேண்டும். ஒரு வாக்களருக்கு மூன்று விருப்பத் தெரிவுகள் உள்ளன.

வேட்பாளர்களது இலக்கங்கள் அடங்கிய பெயர் பட்டியல் இம்முறை வீடுகளுக்கே விநியோகிகப்பட்டுள்ளது. எனவே அதில் தாம் வாக்களிக்கவுள்ள வேட்பாளர்களது எண்களை தெளிவாக அவதானிக்க முடியும்.

மேலே தெரிவு செய்யப்படும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களுக்கு மாத்திரமே வாக்களிக்க முடியும். மாறாக ஒரு கட்சியை தெரிவு செய்து, பிரிதொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது.

அவ்வாறான வாக்கு சீட்டுக்கள் நிராகரிக்கப்படும். அதேபோன்று ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகளுக்கோ அல்லது சுயாதீன குழுக்களுக்கோ வாக்களித்திருந்தால் அந்த வாக்குகளும் நிராகரிக்கப்படும். மேலும் மூன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்தால் அந்த வாக்கும் நிராகரிக்கப்படும் என்றார்.

# கல்வித்துறைகளை இணைத்து அதற்கென ஓர் அமைச்சு தேவை

## பிரதமர் ஹரினி தெரிவிப்பு

கல்வித்துறை அனைத்தையும் ஒன்றாக இணைத்து அதற்கானதொரு அமைச்சு உருவாக்கப்படவேண்டும் என்று பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

கண்டி தபால் நிலைய கேட்போர்கூடத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகாலங்களில் எதுவித அடிப்படையும் அற்ற நிலையில் நண்பர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. எதிர்க்கட்சியில் இருந்து யார் ஆதரவு தருகிறார்களோ அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. அவ்வாறான அமைச்சுக்களுக்கு அறிவியில் ரீதியாகத் தொடர்புகள் இருக்கவில்லை.

உதாரணத்திற்கு உயர்கல்வி, பெருவீதிகள் அமைச்சு என்று ஒன்று இருந்தது. உயர் கல்விக்கும் பெரு வீதிக்கும் அறிவியில் ரீதியில் என்ன தொடர்பு எனக் கேட்டதற்கு உயர் கல்வி மாணவர்கள் எப்போதும் பெருவீதிகளில் இருந்து ஆர்பாட்டம் செய்கிறார்கள், எனவே பொருத்தமானது எனக்கூறப்பட்டது. இவை நகைப்புக்கிடமான விடயங்கள்.

இப்படியல்லாது எதிர்காலத்தில் கல்வியுடன் தொடர்புபட்ட சகல துறைகளையும் ஒன்றிணைத்த அமைச்சு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

அதாவது உயர் கல்வி, பாடசாலைக் கல்வி, பாலர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்லைக்கழகங்கள், பாசலைச்சபைகள் போன்ற கல்வியுடன் தொடர்புடைய அனைத்து துறைகளும் ஒன்றாக இணைக்கப்படவேண்டும்.

தற்போது பரீட்சையை மையமாகக் கொண் கல்வியே உள்ளது. 10 முதல் 12 வயதுவரையானவர்கள்கூட புலமைப்பரிசில் என்று பரிட்சையை மையமாகக் கொண்டு போட்டிக்காகப் பயில்கின்றனர்.

இந்த வயதுப் பிரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வயதல்ல. எனவே நாட்டிற்கு தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும் பிரஜைகள் உருவாகும் கல்வித்திட்டமே தேவை என்றார்.

## அமைச்சர் ஹேரத் துறைமுகத்துக்கு திடீர் வருகை

கொள்கலன் அனுமதியில் ஏற்பட்டுள்ள தாமதம் உள்ளிட்ட துறைமுகத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் விஜித ஹேரத் துறைமுகத்திற்கு திடீர் வருகையொன்றை மேற்கொண்டார்.

அங்கு சுமார் 2 வருடங்களாக கொள்கலன் அனுமதியில் இழுபறிநிலை காணப்படுவதால், தாங்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

சுமார் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்னர், அனைத்து முறைகளையும் பின்பற்றினாலும், ஒவ்வொரு நாளும் சுமார் 1,800 முதல் 2,000 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால், தற்போது துறைமுகத்தில் இருந்து கொள்கலன்கள் வெளியேறுவதில் பல குளறுபடிகள் நடப்பதாகவும், டோக்கன் முறையில் எண் கொடுத்தாலும் அந்த வரிசையில் கொள்கலன்கள் துறைமுகத்தை விட்டு வெளியேறுவதில்லை என்றும் தெரிவித்தனர்.

சிலர் கடமை நேரங்களில் மது அருந்திக் கொண்டே கடமைகளைச் செய்வதாகவும், சிலர் தங்கள் கடமைகளைப் புறக்கணித்து இறுதிச் சடங்குகளில் பங்கேற்பதாகவும் தெரிவித்தனர். எனவே, கொள்கலன் வெளியேற்றும் செயற்பாடுகளை மோசடி மற்றும் ஊழல் இன்றி சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அமைச்சரிடம் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

## தபால்மூல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட செயலகத்தில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. தபால் மூல வாக்களிப்பிற்காக நேற்று முன்தினமும் நேற்றும் இரண்டு விசேட நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இம்முறை 736,000 இற்கும் மேற்பட்டோர் தபால்மூலம் வாக்களிக்க தகுதிபெற்றிருந்தனர்.

## டொலர் வரத்து அதிகரிப்பு

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, 2024 ஒக்டோபர் மாதத்தில் பெறப்பட்ட வெளிநாட்டுப் பணம் 587.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

அதன்படி, ஜனவரி முதல் அக்டோபர் வரை பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுப் பணம் 5,431.54 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

2023 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 11.7சதவீதமான அதிகரிப்பு என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் ஒக்டோபர் 30 வரை, இயற்கை இடர்களால் சேதமடைந்த வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக சீன மக்கள் குடியரசினால் வழங்கப்பட்ட சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி உதவி திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இயற்கை இடர்களினால் சேதமடைந்த மக்களின் வீடுகளைப் புனரமைப்பதற்காக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் அந்த நிதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், இடர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது.

மேலும், அவசரகால மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் சீன மக்கள் குடியரசில் இருந்து கிடைக்கவுள்ள 10 மில்லியன் யுவான் பொருள் உதவி மற்றும் பொருட்கள் பெறப்பட்டவுடன் முறையான கணக்குப்பதிவுக்குப் பிறகு விநியோகிக்கப்பட உள்ளன.

சேதமடைந்த வீடுகள் மற்றும் உடைமைகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குதல், வீடுகளின் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளையும் அனர்த்த நிவாரணம் மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின் ஊடாக விரைவாக நிறைவேற்றவும், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் கனவுகளை நனவாக்கும் யுகத்தை உருவாக்க வாக்குகளைப் பயன்படுத்துங்கள்

## சஜித் கோரிக்கை



ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க மேடைக்கு மேடையாக வழங்கிய வாக்குறுதிகளை மீறும் வேளையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மையைப் பெற்றுத் தந்து, மக்களின் கனவுகளை நனவாக்கும் யுகத்தை உருவாக்க வாக்குகளைப் பயன்படுத்துமாறு சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேடைகளில் தெரிவித்த கடவுச்சீட்டு வரிசைக்கான தீர்வு, உணவுப் பொருள்களின் விலையைக் குறைப்பதாக அவர் அளித்த வாக்குறுதிகள், எரிபொருள் விலைதிருத்தங்களை மேற்கொண்டு இலஞ்சம் ஊழல் நீக்கப்பட்டு குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுத் தருவேன்எனபலவாக்குறுதிகளைவழங்கியிருந்தார். அநுர குமார திசாநாயக்க அண்மையில் நியமித்த பொற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு இவ்வாறான ஊழல்கள் தொடர்பில் போதிய தெளிவில்லை.

தேர்தல் மேடைகளில் ஒரு கதையையும் தற்போது வேறு விதமான கதைகளையும் தெரிவித்து வருகிறார். எரிபொருள் விலை சூத்திரத்திற்கு ஜனாதிபதி அடிமையாகிவிட்டார். பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, பணக்காரர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எரிபொருளைக் குறைப்பதற்கே நடவடிக்கை எடுத்தார்.

ஓட்டோ உரிமையாளர்கள், பொது மக்கள் என சாதாரண மக்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எரிபொருள் விலைகளை குறைக்கவில்லை. எரிபொருள் மானியமும் பணக்காரர்களுக்கே செல்கிறது.

மின்சார கட்டணம் 33 வீதம் குறைக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மின்சார பாவனையாளர்களை அழுத்தங்களுக்கு ஆளாக்கியுள்ளார்.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வரிச்சுமையை குறைப்பதாக கூறிய அநுர குமார திசாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு சுற்று பேச்சு நடத்தி, சர்வதேச நாணய நிதியத்தின் முன் மண்டியிட்டு அதன் கைதியாகி கைப்பாவையாக மாறியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்ற பின்னர், அரசாங்கத்தை அமைத்து, பொது மக்கள் யுகத்தை அமைத்து அனைத்து சலுகைகளையும் வழங்குவோம்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியாத ஜனாதிபதி, பாட விதானங்களை பூரணமாக்காமல் உயர்தர பரீட்சையை நடத்துகிறார். எமது தொடர் முயற்சியால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட பாராட்டே சட்டம் டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் மீண்டும் அமுலுக்கு வரவிருக்கிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் தொழில் இடங்கள் வைப்பிலடப்பட்ட சொத்துக்கள் ஏலம் விடப்படும். இப்பிரச்னைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. 6 மாதங்களுக்கு ஒரு தடவை அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை உயர்த்துவேன் என கூறி அரச ஊழியர்களை கூட இன்று கைவிட்டுள்ளார் என மேலும் தெரிவித்தார். (05)

# ரணில் விக்ரமசிங்க உணவகம் ஒன்றை ஆரம்பிக்கப்போகிறார் என நினைத்தேன்

## தேர்தல் பிரச்சார கூட்டத்தில் அநுர கிண்டல்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோற்ற பின்னர் பெருமளவு சமையல்காரர்கள் தனக்கு தேவை என வேண்டுகோள் விடுத்தவேளை அவர் உணவகம் ஒன்றை ஆரம்பிக்கப்போகின்றாரோ என நினைத்தேன் என ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளிடம் சொகுசு வீடுகள்,தனிப்பட்டபாதுகாப்புஅதிகாரிகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

நாம் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அதனை தான் தேசிய மக்கள் சக்தி செய்யவுள்ளது.

அரசியல் என்பது நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு கீழ்படிய வேண்டும். அதற்கு மாறாக சட்டத்தை மீறி செயற்பட கூடாது. அப்படி ஒரு நாட்டை தான் தேசிய மக்கள் சக்தி உருவாக்கவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.(05)

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் 5 வருடங்களுக்கானது வாரங்களுக்கானதல்லை

## விஜித ஹேரத் விளக்கம்

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல்விஞ்ஞாபனம் ஐந்து வாரங்ளிற்கானது இல்லை. ஐந்து வருடங்களிற்கானது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என சில அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர் என தெரிவி;த்துள்ள அவர், அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை ஐந்து வருடங்களிற்காகவே சமர்ப்பித்தது ஐந்து மாதங்களிற்காக இல்லை என தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடகாலத்தில் பூர்த்தி செய்வதற்காகவே அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்தது எனத் தெரிவித்துள்ள அவர், சஜித்பிரேமதாச போன்ற சில அரசியல்வாதிகள் வேண்டுகோள்விடுப்பதுபோலஐந்துவாரங்களிற்குள் அவற்றை நிறைவேற்ற முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் மேலும் தீர்மானங்களை எடுக்க வேண்டும், ஐந்து வருடங்களிற்குள் நிறைவேற்றுவதற்கு தீர்மானித்த விடயங்களை ஐந்து வருடங்களிற்குள் பூர்த்தி செய்ய முடியாது, நாங்கள் இன்னமும்



அரசாங்கத்தை கூட அமைக்கவில்லை, கடந்த ஐந்து வாரங்களில் மிக முக்கியமான தீர்மானங்களை மாத்திரம் எடுத்தோம் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

100 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பிரச்சினைகளிற்கு தீர்வை காணத்தவறிய சூழ்நிலையில் மூன்று அமைச்சர்கள் நாட்டை நிர்வகிக்கின்றனர் என குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் புதிய பாதையில் பயணிக்கின்றோம்என்பதைகாண்பித்துள்ளோம்,நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படுவதற்கு ஊழல் அரசியல் கலாசாரம் ஊழல் போன்றவையே காரணம் எனத் தெரிவித்துள்ளார்.(05)

# கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை

## 6 கோடா பரல்கள் மீட்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் தாந்தாமலை, மாவடிமுன்மாரி கிராமங்களின் எல்லைப் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் இடம்பெற்று வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் வியாழக்கிழமை பகல் முற்றுகையிடப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் கடமைப் பிரிவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கிராமத்தின் பொதுமக்கள் கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போது சட்டவிரோத உற்பத்திக்கு தயாரான கோடா ஆறு பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் தப்பி ஓடியுள்ளனர் எனவும் கைப்பற்றப்பட்ட கோடா பரல்கள் அவ்விடத்தில் அழிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எதிரிகளும் துரோகிகளும் இல்லாத தமிழ் தேசியம்

**2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்மட்டில் பெரும் சவாலுக்குரியதாக மாறியிருக்கின்றது. மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்குக் கட்சிகள் திணறுகின்றன. இதுவரையில் தமிழ்த் தேசியம், விடுதலை, தன்னாட்சி, உரிமை என்ற ஒற்றைப் புள்ளியில் திரண்டிருந்த தமிழ் இனமும் தமிழ் கட்சிகளும் இப்போது தடுமாற்றம் அடையத் தொடங்கியுள்ளன. இதற்குக் காரணம் எதிரியையும் துரோகிகளையும் முன்வைத்து தேசியத்தின் பால் இதுநாள் வரையில் தமிழ் மக்களைத் திரட்டி வைத்திருந்த உத்திதான்.**

**இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியம், தமிழர் உரிமை, தமிழர் விடுதலை என்பவற்றிலும் பார்க்க சாராயக் கடை உரிமம் தொடர்பான விவகாரமும் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஆளும் தரப்புடன் சேர்ந்து இயங்குவதா இல்லையா என்பதும் பொருளாதார அபிவிருத்தியுமே பேசுபொருளாக மாறி இருக்கின்றது. அதனால்தான் சிலர் வெளிப்படையாகவே இந்தத் தமிழ் அரசியல் கட்சிகளின் போக்கை விமர்சித்து அவை தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து அரசியல் செய்யும் இடத்திற்கு நகரவேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.**

**தமிழ்த் தேசியத்தின் குரல் இந்தத் தேர்தலில் மிக மெலிந்துபோய்விட்டது. இத்தனைக்கும் தமிழ்த் தேசியம், தமிழர் திரட்சி என்பவற்றை முன்வைத்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று பெயரில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிக்கு வடக்கு கிழக்கைச் சேர்ந்த 2 லட்சம் மக்கள் வாக்களித்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே தமிழ்த் தேசியத்தின் குரல் மெலிந்து தேய்ந்து வருவது கவலைக்குரியது. இது குறித்து அனைத்துத் தமிழ்த் தேசிய சக்திகளும் மீள்பரிசீலனை செய்வது அவசியம்.**

**இந்தத்தேர்தலில்எந்தத்தமிழ்க்கட்சிஅதிகஆசனங்களைப் பெறும் என்பது உறுதியாகக் கணிக்கப்படமுடியாததாகவே இருக்கின்றது. எல்லாக் கட்சிகளும் தமக்கு அதிகம் ஆசனங்களைத்தந்தால்மட்டுமேசிங்களத்தலைமைகளுடன் அல்லது ஆளும் தரப்புடன் பேரம் பேச முடியும் என்கின்றன. இதில் எந்தக் கட்சியை நம்புவது என்பது மக்களுக்கும் குழப்பமாகவே இருக்கின்றது. எல்லாத் தமிழ்க் கட்சிகளுமே தேசியம், தன்னாட்சி, அபிவிருத்தி என்பவற்றைப் பற்றிப் பேசினாலும் தமிழர்களை ஒருங்கிணைக்கக்கூடிய எழுச்சி மிகு சக்தி அவற்றிடம் இருக்கவில்லை என்பது வெளிப்படை. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியத்தை நோக்கி உரிமைக்கான வேட்கையை நோக்கி தமிழ் மக்களைத் திரட்டும் உத்தியை அவை கண்டுபிடிக்கத் தவறியிருப்பதுதான்.**

**இதுநாள் வரையில் எதிரியையும் துரோகிகளையும் முன்னிறுத்தியே தமிழ்த் தேசியத் திரட்சியை இந்தத் தமிழ் கட்சிகள் சாத்தியமாக்கின. அதுவும் தேர்தல் காலங்களில் குறுகிய காலத்தில் தமிழ்த் தேசிய எழுச்சியை இந்த உத்தியின் ஊடாக அரசியல் கட்சிகளால் சாத்தியமாக்க முடிந்தது. ஆனால், இப்போதுஎதிரிகளும்துரோகிகளும்கூடப் பலமிழந்துபோய்விட்ட நிலையில் அவர்களுக்கு எதிராக தமிழர்களை ஒன்றுதிரட்டிக் கூர்ப்படைய வைக்க தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை என்பது நிதர்சனம்.**

**தமிழர்களை ஒன்றிணைப்பதற்கும் ஒற்றைப் புள்ளியில் திரட்டுவதற்கும் தமிழ்த் தேசியம் இன்றியமையாதது. அது முரண்பாடுகளையும், போரையும், எதிரியையும் நோக்கிய கூர்ப்புணர்வை முதன்மைப்படுத்தியதாக இராது தமிழ் மக்களின் உண்மையான வளர்ச்சியை, விடுதலையை நோக்கியதாகக் கட்டமைக்கப்பவேண்டியது அவசியம். அதுவே இன்றைய காலத் தேவை. தேர்தல் வெற்றிகளுக்கு அப்பாலான தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்கவேண்டிய தேவைக்கு இப்போது தமிழ்ச் சமூகம் வந்துள்ளது. அதை யார் செய்யப் போகிறார்கள் என்பதே இப்போதுள்ள கேள்வி.**

# இன்னும் ஒரு ‘இன துரோகி’

**என். சத்திய மூர்த்தி**

இனப்போர் முடிந்து கடந்த பதினைந்து ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ் வாக்களர்கள் மத்தியில் ’உணவா அல்லது உரிமையா?’ என்ற கேள்வியை முன்நிறுத்தி தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு முந்தைய காலகட்டத்தில், இதே கேள்வி, பேரினவாத சிங்கள கட்சிகளுக்கும் தமிழ் இனத்திற்கும் இடையேயான போட்டியாக இருந்தது. தற்போது, அந்த கட்டத்தை தாண்டி, இது தமிழர் அரசியலில் உள்வீட்டு விவகாரமாகவும் உருவெடுத்துள்ளது.

உண்மையை சொல்லப்போனால், கடந்த காலங்களில், குறிப்பாக இனப்போர் முடிவடைந்த காலகட்டத்தில், தமிழர்களுக்கு உரிமையை விட, பொருளாதார வளர்ச்சியும் அதன் அடிப்படையில் உணவு முதலான அன்றாட தேவைகளுமே முக்கியம் என்ற வகையிலேயே அன்றைய ராஜபக்ச ஆட்சியாளர்கள் செயல்பட்டார்கள். அதனால்தான், அதிவேக நெடுஞ்சாலைகள் போன்ற திட்டங்களை முன்னெடுத்தார்கள். அவர்களுடைய கணக்குபடி, இது போன்ற திட்டங்களால், தென்னிலங்கைக்கும் குறிப்பாக தமிழர்கள்தனித்துவத்துடன்அடையாளப்படுத்திக் கொள்ளும் வடமாகாணத்திற்கும் இடையேயான எல்லாவித இடைவெளிகளும் காலப்போக்கில் காணாமல் போய்விடும் என்ற எண்ணம் இருந்தது.

இந்தச் சித்தாந்தத்தை, அப்போதைய இராணுவ செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச உறுதியாக நம்பினார். அவரது மூத்த சகோதரரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச என்னவோ, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லாமல், நாட்டில் அமைதி திரும்பாது என்ற கருத்தில் இருந்தார். அதனால்தான், கோத்தபாய கூறியது போல் வளர்ச்சி திட்டங்களில் கவனம் செலுத்தினார் என்றாலும், அன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களையும் தொடங்கினார்.

அந்த பேச்சு முடிவுறாமலே தோல்வியுற்றது, இன்றைய தமிழர் தலைமுறைக்குமான சாபக்கேடு. அதற்கு முக்கிய காரணம், கூட்டமைப்பின்தலைமைகளும்பிரதிநிதிகளுமே. ஆனால், தமிழர் தலைமைக்கே உரித்தான திசைதிருப்பும் திறமையினால், அந்தப் பழியையும்கூட மஹிந்ததலையில்கட்டிவைத்து, தங்களது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஒரு சேர மீண்டும் ஒரு முறை ஏமாற்றினார்கள். தாங்களும் ஏமாந்தார்கள்.

### கழுதை தேய்ந்து

தற்போது, இதே கேள்வியை பல்வேறு தமிழர் தலைவர்களும் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களும் முன்னிறுத்தி, தயாராக உள்ள தங்களது பதிலையும் ஒரு சேர பொதுவெளியில் சமர்ப்பித்து வருகிறார்கள். அவர்களது கவலை அவர்களுக்கு. அதாவது. தமிழர்களுக்கு இன்றளவும் உரிமைகள்தான் மிகமிக முக்கியமானது என்பது அவர்களது வாதம் அல்லது விதண்டாவாதம்.

அவர்களைப்பொறுத்தவரையில்,தற்போதைய இளைய தலைமுறை தமிழ் வாக்காளர்கள், புளித்துபோன தங்களது வாத-ப்பிரதிவாதங்களை கேட்பதற்குத் தயாராக இல்லை என்ற எண்ணம் தோன்றியுள்ளது. இன்னும் சொல்லப்போனால், முன்னெப்போதைக்கும் இல்லாமல், இந்தத் தேர்தலில், தென்னிலங்கை ஆளும் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி வட மாகாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் சில-பல ஆசனாங்களைக் கைப்பற்றிவிடும் என்ற கவலை தோன்றி உள்ளது.

இதற்கு உதாரணமே, தமிழர் தளங்களில், எந்தவொருதமிழ்அடையாளம்கொண்டஅரசியல் கட்சியோ, ஏன், தனிநபர் வேட்பாளர்களோ தேர்தல் பரப்புரை கூட்டங்களை, பெரிய அளவில், அதிக எண்ணிக்கையில் முன்னெடுக்கவில்லை என்பதுதான். மாறாக, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, பல்வேறு தமிழர் கட்சிள் இடையேயான போட்டாபோட்டி என்பதை தாண்டி இந்தமுறை, நாடாளுமன்ற தேர்தல் தனிநபர் வேட்பாளர்களுக்கு இடையேயான போட்டியாகவே மாறிவிட்டது.

வழமையான, ஒரே அணியில் உள்கூட்டணி வைத்து மூன்று அல்லது நான்கு வேட்பாளர்கள் ஒன்று சோர்ந்து ஒரே குழுவாக பரப்புரை செய்யும் முறையும்கூட காணாமல் போய்விட்டது. மாறாக, வாய்மொழி வதந்தி என்ற வகையில்கூட ஒரே கட்சி அல்லது அணியினரிடையேயான உள்குத்துகள் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.

### மறக்கப்பட்ட விடயம்

இந்தப் பின்னணில், சுரேஷ் பிரேமசந்திரன் போன்ற அனுபவம்மிக்க ஒரு தலைவர், தமிழர்களுக்கு இன்னமும் உரிமைகள்தான் அடிப்டை தேவை. மற்றபடி, ஊழல் ஒழிப்பு, நிர்வாக சீரமைப்பு ஆகிய விடயங்களை தென்னிலங்கை பார்த்துக்கொள்ளட்டும் என்று கூறி உள்ளார்.

இதே நிலைபாட்டில், பல்வேறு பரிமாணங்களையும் இன்றளவும் ஒரே கட்சி மற்றும் கூட்டணியாக இணைந்து செயல்படும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியும், இன்னபிறரும்கூட தங்களது தேர்தல் பரப்புரை உரைகளில் கூறி வருகிறார்கள். ஆனால், அவர்கள் சொல்ல மறந்தது, அல்லது சொல்லாமல் மறைத்து வைக்கும் விடயம் ஒன்று உள்ளது.

இந்த தமிழ் தலைவர்கள் தற்போது கூறும் ’உரிமையா, கடமையா?’ என்பது போன்ற கேள்விகளில் சிக்கிக்கொள்ளாமல் பார்த்தால், அங்கே ஒரு மூன்றாவது பரிமாணம் வெளிப்படும். சுரேஷ் பிரேமசந்திரன் கூறுவது போல், ஊழலாட்சி போன்றவற்றிற்கும் அப்பால், அன்றாட தேவைகள் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை அவர் உள்ளிட்ட தமிழ் தலைவர்கள் எண்ணிப்பார்ப்பதே இல்லை என்பதே உண்மை. அதனால், அவர்களுக்கு மக்களின் வயிற்று பிரச்சினை முக்கியமாக அன்றும்தெரியவில்லை, இன்றும்தெரிவதில்லை.

அன்றைக்காவது, ’இதோ வருது, அதோ வருது’ என்று, தமிழர் உரிமைகள் என்னவோ ஏ-9 சாலையில் ஓமந்தையையோ. கிளிநொச்சியையோ கடந்து விட்டதாக தங்களது மக்களை எதிர்பார்ப்பிற்குள் வைத்திருக்க போராளி குழுக்கள் இருந்தன. பின்னர் அவற்றின் இடத்தில் விடுதலை புலிகள் அமைப்பு அட்டகாசமாக ’ஆட்சி’ செய்து, மக்களின் முழு மூளையையும் மழுங்கடித்திருந்தது. அல்லது, அவர்களை உயிர் பயத்தில் உறைய வைத்திருந்தது.

தற்போது, அனைத்து தமிழ் தலைமைகளும் ஒன்று சேர்ந்து அழைப்பு விட்டாலும், ஒரு போராட்டத்திற்கு, கடையடைப்பிற்கோ பத்து-பதினைந்து பேரைக்கூட தேற்ற முடியாத இவாகள்தான், உரிமை என்ற ஒற்றை புள்ளியை மக்களைத் தற்போதும் சேர்க்க முயல்கிறார்கள். அவர்களுக்கு வெற்றி கிடைத்தால், அது அந்தத் தலைவர்களின் எதிர்காலத்திற்கு நல்லது. இல்லை என்றால் அது தமிழர்களின் எதிர்காலத்திற்கு நல்லது.

### தத்துவார்த்த புரிதல்

சமகால தமிழ் இளைஞர்கள் இடையே சரியான புரிதல் இல்லை என்று இவர்கள் வருத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு தத்துவார்த்த ரீதியான புரிதலை கொண்டு சேர்க்கத் தவறியது யார்? முந்தைய தலைமுறையை சார்ந்த இந்தத் தலைவர்களும் அவர்களின் எடுபிடிகளும்தானே. இதுநாள் வரை, குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டு இருந்துவிட்டு, இன்று, குத்துதே, குடையுதே என்ற அவர்களின் புலம்பல் வெட்கப்பட வேண்டிய விடயம்.

இன்றைய தமிழர் பகுதிகளில் உள்ள இளைஞன் ஒன்றில் வெளிநாடு சென்று, தனது அத்தை- மாமன் போலவும் அவர்களது மேல்நாட்டுவாழ் பிள்ளைகள் போலவும், அமைதியான சூழலில், ஆரவார வாழ்க்கை வாழ விரும்புகிறான். அதில் தவறு எதுவும் இல்லை. ஆனால், தற்போதைய கால-நேர சூழல் சரியாக இல்லை.

’சிங்களம் மட்டும்’ காலகட்டத்தில் தொடங்கிய தமிழர்களின் இடப்பெயர்ச்சியின் பின்னாலும் இந்த அவா புதைந்திருந்தது. ஆனாலும், அந்தத் தலைமுறையினர் மேலைநாடு சென்று தங்களது வாழ்க்கையை செம்மைபடுத்திக் கொள்ளத் தேவையான கல்வித் தகுதியை பெற்றிருந்தனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கைக் காப்பாற்ற வேட்டுமாயின் சைக்கிளுக்கு வாக்களிக்கவேண்டும்

## வடக்கு மக்களைக் கோருகிறார் சுரேஸ்

கிழக்கை மண்ணை காப்பாற் றுவதற்காக மக்களுடன் இனைந்து கடந்த 15 வருடமாக போராடிவருகின்றோம். எனவே கிழக்கு மாகாணத்தை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் வடக்கில் இருக்கின்ற தமிழ் மக்கள் சைக்கிளுக்கு வாக்களிக்க வேண்டும். அப்போது தான் கிழக்கை காப்பாற்ற முடியும் என இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் கிழக்கு மண்ணிலிருந்து அறைகூவல் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை சந்தியில் புதன்கிழமை மாலை சைக்கிள் சின்னதில் தேர்தல் பிரசாரத்துக்கான கட்சி காரியாலயம் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

இந்தத் தேர்தலை இதுவரைக்கும் நடந்த தேர்தல்போல எங்கள் மக்கள் கையாளக் கூடாது என ஆரம்பத் திலிருந்தே தெரிவித்துவருகின்றோம். இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்குப் பேரம் பேசக்கூடிய இறுதி சந்தர்ப்பமாக அமையப் போகின்ற இந்த தேர்தலுக்குப் பின்னர் தமிழ் மக்களுடைய வாழ்வு இந்த தீவிலே ஓர் அடிமைத்தனமாக இருக்கப் போகின்றதா? அல்லது சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் சம உரிமையோடு வாழப்போகின்றோமா? என்ற ஒரு கேள்வி எழுப்புகின்ற ஒரு தேர்தல் அமையப் பெற்றிருக்கின்றது.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் தமிழர்கள் ஒரு நீண்ட நெடிய வரலாற்று ரீதியாகப் போராடி ஒரு மரபுவழியாக தமக்கான ஒரு தனித்துவத்தை பெற்றிருக்கும் ஓர் இனம் அதனடிப்படையில் தமிழர்கள் இந்த தீவிலே சுதந்திரமாக வாழ்வதற்காக அதிக விலை கொடுத்துள்ளனர். உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். கோடான கோடி சொத்துக்களை இழந்துள்ளனர். நிலங்களைப் பறிகொடுத்துக் கட்டமைக்கப்பட்ட இனழிப்புக்கு உட்பட்டு வருகின்றனர். எனவே, மக்கள் இந்த தேர்தல் தொடர்பாக மிகுந்த ஆர்வத்துடனும் கரிசனையுடனும் கையாளவேண்டும்.

வடக்கு கிழக்கிலே சைக்கிள் அணி மிகப் பெரும் பலமாக வந்து கொண் டிருக்கின்றது தென்பகுதியை பொறுத்தமட்டில் ஓர் ஊழல் அற்ற நேர்மையான ஓர் அரச தலைவராக அனுரகுமார திசாநாயக்காவை ஜனாதிபதியாக அந்த மக்கள் தெரிவு செய்துள்ளனர். ஆனால் வடக்கு கிழக்கிலே அவ்வாறான ஒரு தலைவரை இதுவரைக்கும் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் இந்த தேர்தல் அந்த சந்தர்ப்பத்தை மக்களுக்குக் கொடுத்திருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளைச் சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொடுப்போம். அதற்கு தலைமைதாங்க வேண்டும் என்ற அடிப்படையிலே தமிழர்கள் நம்பி யுத்தத்தின் பின்னர் மூன்று தடவைகள் வாக்களித்து அறுதி பெரும்பான்மையான ஆணைகளைப் பெற்று தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனழிப்புக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் அதனைத் தட்டிக்களித்து எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்காது தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்ததை தவிர வேறு எந்தவொரு வேலையையும் இந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செய்யவில்லை.

அதனால் நாங்கள் கடந்த 15 வருடங்களாக தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் வடக்கு, கிழக்கிலே நடைபெறுகின்ற கட்டமைப்புசார் இடம்பெறும் இன அழிப்பை மக்களுடன் இணைந்து தடுத்து நிறுத்தி வருகின்றோம் அப்படிப்பட்ட எங்கள் தலைமைக்கும் அணிக்கும் ஒரு தடவை இந்த தேர்தலில் சந்தர்ப்பம் தாருங்கள்.

எந்த நோக்கத்தோடு எங்களைச் சிங்கள தேசம் அழித்ததோ அதற்கான பரிகாரத்தை நாங்கள் நாடாளுமன்றத்தில் பேரம் பேசி ஐ.நா. மனித உரிமை இனழிப்பு தொடர்பான பொறுப்புக்கூறலை சரியான இடத்துக்கு கொண்டு செல்ல ஆணையை தாருங்கள்.

மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காகச் செயற்படுகின்ற சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் இந்த அணியைப் பலப்படுத்தப் போகின்றீர்களா? இல்லை வழமைபோன்று சாராயம் அரிசி மாவுக்கும் வெறும் சலுகைகளுக்கும் நீங்கள் வாக்களித்து இனிமேல் உரிமை என்றால் என்ன என்று கேட்கமுடியாத ஒரு நிலைக்கு இட்டுச் சென்று நிரந்தரமாகத் தமிழர்கள் அடிமையாகப் போகின்றோமா? என்ற கேள்வியைப் பெருவாரியான மக்கள் விளங்கி வடக்கிலும் கிழக்கிலும் சைக்கிள் அணிக்குப் பின்னால் நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாக கடந்த 15 வருடங்களாக இந்த மண்ணில் இருந்து போராடி செயற்பட்டு வருகின்றோம். கிழக்கில் மக்கள் நிச்சயமாக ஆணையை தரும் அதேவேளை வடக்கில்; எங்கள் கட்சி மீது மக்கள் திசை திரும்பியுள்ளனர் அதனால் ஏனைய சிங்கள கட்சிகளும் அவர்களுடன் சோந்திருக்கின்ற கட்சிகளும் குழப்புவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலே கூடியளவு சாராயம் மற்றும் பணங்களையும் கொடுத்து இந்த மக்களை திசைதிருப்புவதற்கான வேலைத் திட்டங்களை செய்கின்றனர்.

வீடு, சங்கு, சின்னத்திலே போட்டியிடுகின்ற அந்த அரசியல்கட்சிகளின் கடந்தகால செயற்பாடு பற்றி எங்கள் மக்களுக்கு சொல்லவேண்டிய அவசியம் கிடையாது பிறிந்து செயற்படும் அத்தனை பேரும் இந்த இனத்தை அழிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கான இடைக்கால யாப்பை உருவாக்கி வைத்துள்ளனர். எனவே இந்த மண்ணிலே தமிழ் மக்கள் நிம்மதியாக சிங்கள மக்கள் போன்று ஒரு சுபீட்சத்துடன் வாழவேண்டும் என்றால் இந்த தேர்தலை பயன்படுத்த வேண்டும். - என்றார். (05)

# இன்னும் ஒரு 'இன துரோகி'

4ம் பக்க தொடர்ச்சி..........

அடுத்தடுத்த தலைமுறையினரோ, இனப்போரை முன்னிறுத்தி, அரசின் அச்சுறுத்தலை காரணம் காட்டி. இங்கிருந்து தப்பி சென்றவர்கள்.

### பொருளாதார அகதி

இப்போது இனப்போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும், தற்போதைய தமிழ் இளைஞர்கள் இல்லாத ஊருக்கு வழி தேடிக்கொண்டு இருக்கிறார்கள். தங்களது எண்ணம் நிறைவேறாமல் போவதில் ஏற்படும் அசதியும் கவலையும்கூட அவர்களுக்கு தங்களது அரசியல் தலைமைகள் மீது வெறுப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அதனை அவர்கள் பாதையில் சென்று, சரி செய்வதற்கு சமூக-அரசியல் தலைமைகள் முயற்சிக்காததும், தற்போதைய தேர்தல் கால களநிலைக்கு காரணம்.

ஆனால். அந்த உண்மையை கூறாமல், தத்துவார்த்தம் பேசும் அரசியல் தலைவர்கள் இனி திருந்தப் போவதில்லை. அவர்கள் திருந்தவில்லை என்று இன்றைய இளைஞர்கள் கவலைப்படப் போவதும் இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில். இந்தத் தலைமைகளும் தலைவர்களுமேகூட இன்னுமொரு 'இன துரோகி' வகையில் சார்ந்தவர்கள்தான். அத்தகைய எண்ணவோட்டத்தில் உண்மையும் இருக்கிறது. அந்தப் பட்டியலில், தற்போதுள்ள, உள்நாட்டு, வெளிநாட்டு, புலம்பெயர்ந்த தமிழ் தலைவர்கள் அனைவரும் அடங்குவர் என்பதும் உண்மை.

# மிரிஹானவில் வீடுடைத்து தங்க நகைகள் திருட்டு

## சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது

மிரிஹான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டபகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து தங்க நகைகளைத் திருடிச் சென்றதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக நுகேகொடை பொலிஸ் குற்றப்புலனாய்வுபிரிவினர் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு சம்பவம் கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுபிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பெத்தகானை பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 99 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)






# பொதுத்தேர்தலில் பிரசாரங்கள் குறைவு அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளது

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



பொதுத்தேர்தலில் 8888 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் ஆயிரத்திற்கும் குறைவான வேட்பாளர்களே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இது மக்களிற்கு அரசியல் ஈடுபாடு குறைவடைவதை காண்பிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மாற்றமடைந்துள்ளமையும், பாரம்பரிய கட்சி கட்டமைப்பு குறித்த அதிருப்தியும் இதற்கு காரணம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வழமையாக வாக்காளர்களை உள்வாங்குவதற்காக 600,000 கட்சி அலுவலகங்களை அமைப்பார்கள், ஆனால் இம்முறை 9241 கட்சி அலுவலகங்களே இயங்குகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுச்சொத்துக்கள் துஸ்பிரயோகம் போன்றவை தற்போதும் காணப்படுகின்ற போதிலும் ஆபத்தான கட்டத்தை அவை நெருங்கவில்லை எனத் தெரிவித்துள்ள ரோஹண ஹெட்டியாராச்சி, 25 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன அவை ஆபத்தான கட்டத்தை அடையவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டிற்கு தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும் பிரஜைகளை உருவாகும் கல்வித்திட்டமே தேவை

## பிரதமர் ஹரிணி திட்டவட்டம்




பரீட்சையை முதன்மையாகக் கொண்ட கல்வித்திட்டத்திற்குப் பதில் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பிரஜைகளை உருவாக்கும்கல்வித்திட்டம்ஒன்றுஏற்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கண்டி தபால் நிலைய கேட்போர்கூடத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் எதுவித அடிப்படையும் அற்ற நிலையில் நண்பர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

எதிர்கட்சியில் இருந்து யார் ஆதரவு தருகிறார்ளோ அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. அவ்வாறான அமைச்சுக்களுக்கு விஞ்ஞான ரீதியாக தொடர்புகள் இருக்க வில்லை.

உதாரணத்திற்கு உயர் கல்வி, பெருவீதிகள் அமைச்சு என்று ஒன்று இருந்தது. உயர் கல்விக்கும் பெரு வீதிக்கும் விஞ்ஞான ரீதியில் என்ன தொடர்பு எனக் கேட்டதற்கு உயர் கல்வி மாணவர்கள் எப்போதும் பெருவீதிகளில் இருந்து ஆர்பாட்டம் செய்கிறார்கள், எனவே பொருத்தமானது எனக் கூறப்பட்டது. இவை நகைப்புக்கிடமான விடயங்கள்.

இப்படிஅல்லாதுஎதிர்காலத்தில்கல்வியுடன் தொடர்புபட்ட சகல துறைகளையும் ஒன்றிணைத்தஅமைச்சுஒன்றுஉருவாக்கப்பட வேண்டும்.

அதாவது உயர் கல்வி, பாடசாலைக் கல்வி, பாலர் கல்வி, தொழில் நுற்பக் கல்வி, தொழிற் கல்வி, தொழில் நுட்பக்கல்லூரிகள், பல்லைக்கழகங்கள், பாடசாலைகள் போன்ற கல்வியுடன் தொடர்புடைய அனைத்து துறைகளும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.

மேலும்தற்போதுபரீட்சையைமையமாகக் கொண்ட கல்வியே உள்ளது. 10 முதல் 12 வயது வரையானவர்கள் கூட புலமைப்பரிசில் என்று பரிட்சையை மையமாகக் கொண்டு போட்டிக்காகப் பயில் கின்றனர்.

இந்தவயதுப்பிரிவுபோட்டிப்பரீட்சைக்குரிய வயதல்ல. எனவே நாட்டிற்கு தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும் பிரஜைகள் உருவாகும் கல்வித்திட்டமே தேவை. - என்றார்.(05)

# பாடசாலை மாணவர்களைத் தாக்கி சித்திரவதைசெய்த 3 சிப்பாய் கைது

இரு பாடசாலை மாணவர்களை தாக்கி சித்திரவதை செய்ததாக கூறப்படும் மூன்று இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.


மாத்தளை பல்லேபொல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் இரு மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் ஒருவரது சகோதரனுக்கும் தாக்குதலுக்குள்ளான மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



# வென்னப்புவ துப்பாக்கிசூட்டு சம்பவம் தொடர்பில் வெளியாகிய தகவல்கள்

வென்னப்புவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கிம்புல்கால பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு அருகில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்ததுப்பாக்கிச்சூட்டில்பெண்ணொருவரும் நபரொருவரும் காயமடைந்துள்ள நிலையில் மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் ஆண் மாரவில பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும், காயமடைந்த பெண் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டில் உள்ள நீர் குழாயை பழுதுபார்ப்பதற்காக வந்திருந்த இரு நபர்கள் தங்களது பணியை நிறைவு செய்து விட்டு வீட்டை விட்டு வெளியேறிய போது, முகமூடி அணிந்தவாறு அப்பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனங்காணாத இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, நீர் குழாயை பழுதுபார்ப்பதற்காக வந்திருந்த இரு நபர்களில் ஒருவரும் , குறித்த வீட்டில் வசித்து வந்த பெண்ணுமே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளனர்.

மேலும்,துப்பாக்கிச்சூட்டை நடத்திய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் சந்தேக நபர்களை கைது செய்வதற்கானவிசாரணைகளைமேற்கொண்டு வருவதாகவும் வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# 3,000 சாரதி அனுமதி பத்திரங்கள் நீதிமன்றங்களால் இடைநிறுத்தம்

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 3,000 சாரதி அனுமதி பத்திரங்களை நீதிமன்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாகன சாரதிகள் போக்குவரத்து விதிகளை மீறல்களை மேற்கொண்டமை தொடர்பான விசாரணைகளை அடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய இவ் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 3,249 சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடிக்கடி வீதி விபத்துக்கள் நடைபெறுவதற்கு முக்கியகாரணங்கள்கவனக்குறைவாக வாகனத்தை செலுத்துதல் மற்றும் தரமற்ற வாகனங்கள் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் பேராசிரியர் மொஹமட் மஹீஸ் தெரிவித்துள்ளார்.

எனவே, வாகனத்தை செலுத்துவதற்கு முன்னர் அதன் தரத்தை பரிசோதிப்பது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் வீதி அமைப்பில் காணப்படும் குறைபாடுகளும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன என பேராசிரியர் மொஹமட் மஹீஸ் தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## வெதுப்பக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாயின்பெறுமதிவலுவடைந்தமையின் பயன் மற்றும் மூலப்பொருட்களின் விலை குறைப்பின் பயன் என்பனவற்றை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு வெதுப்பக மற்றும்சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்களா? என்பதை ஆராய்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு இணையாக வெதுப்பக உரிமையாளர்களின் சங்கத்தினரையும் ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்தினரையும் அழைத்து விலை குறைப்பு தொடர்பில் கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் வடக்கு, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இன்று மாலை வேளையில் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாக இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## அதிக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஆட்சி மாற்றம் நடைபெற்று இருக்கின்றது. இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த ஜனாதிபதி அவர்கள் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலைமை வந்திருக்கிறது. அவருடன் சேர்ந்து குழுவினராக செயல்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரும் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி மிகத் தெளிவாக, ஊழல் வாதிகள், களவு செய்தவர்கள், கற்பழித்தவர்கள், கொமிசன் பெறுபவர்கள், போன்றவர்களை ஆளும்தரப்புடன் இணைக்கமாட்டோம் என கூறியுள்ளார். அந்த வகையிலே நாங்கள் இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஏனைய கட்சிகளை பார்க்கும் போது ஜனாதிபதி சொல்லும் நிலைமையையும் அவதானித்தால், எந்த ஒரு கட்சியும் ஜனாதிபதியுடன் சேர்ந்து செயல்படக்கூடிய நிலைமை இல்லை.

தமிழ் மக்களுக்கு சிறந்ததொரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஏனெனில் ஜனாதிபதி 42 வீதமான வாக்குகளால்தான் கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 113 உறுப்பினர்களை பெறுவது என்பது அவருக்கு சிக்கலாக அமையலாம். அந்த வகையில் பெரும்பான்மையை பெறுவதற்காக வேறு யாருடைய உதவியையும் தேட வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்படும்.

இன்னும் ஒரு கட்சியை தேடி அவர் கொலை செய்தவர்களுடனோ களவு செய்தவர்களுடனோ கற்பழித்தவர்களுடனோ சேர முடியாது. ஆகவே அவர் சேர்ந்து வேலை செய்யக்கூடிய தகுதியுடைய கட்சி நாங்கள் மாத்திரமேதான்.

அவ்வாறான ஒரு சூழ்நிலையிலே நாங்கள் தமிழ் மக்களுடைய சார்பிலே பேரம் பேசுகின்ற சக்தியாக மாறலாம். நாங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது இரண்டாவது விடயம். ஆனால் ஜனாதிபதிக்கு அவ்வாறான ஒரு தேவை வருகின்றபோது அதிகளவான ஆசனங்கள் எங்களிடம் இருக்குமாயின் நாங்கள் ஒரு பேரம் பேசும் சக்தியாக நாங்கள் இருக்கலாம்.

பேரம் பேசும் சக்தியாக நாங்கள் இருந்தால் நாங்கள் இந்த மாவட்டத்தில் இருக்கும் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் பேரம் பேச முடியும். மக்களுக்கு பல்வேறுபட்ட சிக்கல்கள் உள்ளன. அவ்வாறான சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதாக இருந்தால் அதிகாரம் எங்களுடைய கையில் இருக்க வேண்டும்.

அதிகாரம் உங்களுடைய கையில் இருக்க வேண்டுமாக இருந்தால் எங்களுடைய மக்கள் எங்களுடைய கட்சிக்கு அதிகளவான வாக்குகளை வழங்க வேண்டும். எனது கட்சிக்கு அதிகமான வாக்குகள் செலுத்தினால் நாங்கள் பேரம் பேசும் சக்தியாகவும் இந்த மாவட்டத்தின் நிர்வாகத்திற்கும் நாங்கள் பொறுப்பாக இருந்து செயற்படுவோம் என்றார்.

## ரூ. 800....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் குருணாகல் பகுதியில் நடத்திச் சென்ற பிரமிட் நிதி நிறுவனம் ஊடாக வைப்பாளர்களின் நிதியை மோசடி செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருணாகலைச் சேர்ந்த 52 வயதான தம்மிகரணசிங்க எனும் சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் 2022ஆம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவை அவமதித்து நாட்டிலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

மலேஷியாவின் கோலாலம்பூரில் இருந்து நேற்று அதிகாலை அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தார்.

சந்தேகநபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைவாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டதுடன் அவரை அழைத்துச் செல்வதற்காக வருகைதந்திருந்த அவரது மனைவியும் கைது செய்யப்பட்டார்.

பிரமிட் நிதி நிறுவனம் ஊடாக 2,500 வைப்பாளர்களின் நிதியை சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# காணாமற்போன பெண் சடலமாக மீட்கப்பட்டார்

பாதுக்கை, துன்னான பிரதேசத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் வியாழக்கிழமை பிற்பகல் நிர்வாணமான நிலையில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவை, பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண், குடும்ப நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பாதுக்கை பிரதேசத்திற்குச் சென்றுள்ள நிலையில் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சடலமாக மீட்கப்பட்ட பெண் தனது உறவினரின் வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாததால் அவரது உறவினர்கள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்கை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிரமிட் திட்டமூடாக பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்தவர் விமான நிலையத்தில் கைது

பிரமிட் திட்டத்தின் ஊடாக பெருந்தொகை பணத்தை மோசடி செய்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (வெள்ளிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஒரு வருடத்திற்கு முன்பு பிரமிட் திட்டத்தின் ஊடாக பல நபர்களிடம் இருந்து 10 பில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்து நாட்டை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று மலேசியாவில் இருந்து நாட்டுக்கு வருகை வருகை தந்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை, சந்தேகநபரை வரவேற்பதற்காக விமான நிலையத்தில் காத்திருந்த அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

(05)


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir




# ஈழத்து சைவ ஆலயங்கள்



திருக்கோணேச்சரம்

நாற்புறமும் நீரால் சூழப்பட்டு இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் நாடு ஈழம். உலகத்தவர்களால் ஈழமானது சைவசமயத்தின்முன்னோடியாகபோற்றப்பட்டுள்ளது. பழந்தமிழ் புலவரான திருமூலர், திருமந்திர நாயகன் இலங்கையை சிவபூமி என அழைத்துள்ளார். இலங்கையின் பூர்வீகக் குடிகளாகிய இயக்கர், நாகர் முதலியோர் சைவசமயத்தைக் கடைப்பிடித்தவர்களாவர். நாகர்களால் ஈழத்தில் பலவகைப்பட்ட கோயில்கள் நிறுவப்பட்டுள்ளன. முன்னேச்சரம், திருக்கரசை, கோணேச்சரம் முதலான கோயில்கள் சைவர்களாலேயே நிறுவப்பட்டுள்ளன. அதற்கான சான்றுகளும் உள.

புராண காலத்தில் பார்வதி தேவியின் சரீரத்துண்டுகள் பூமியில் பல பாகங்களில் விழுந்து அவை சக்தி பீடங்களாக மாறின. அச்சமயம் இலங்கையில் இரண்டு துண்டுகள் விழுந்து அவை சக்தி பீடங்களாக மாறின என புராணங்கள் விளக்குகின்றன. அவ்விரண்டு ஆலயங்களும் முன்னேச்சரம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் என்பனவாகும். இவ்விரண்டுஆலயங்களும்நாகர்காலத்தில்கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்களாகும். முன்னேச்சரமானது ஐந்து ஈச்சரங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது சிலாபக் கடற்கரையில் அமைந்துள்ள ஆலயமாகும். இது நாகர் காலக் கோயில் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன. இங்கு நூறு திரிகள் இட்டு விளக்கேற்றக்கூடிய கல்விளக்கு ஒன்று உள்ளது. இதிலிருந்து இந்த ஆலயத்தில் இராக் காலங்களிலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளமையை உய்த்தறிய முடிகிறது. அக் கல் விளக்கில் மணிநாகன் எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அது தவிர வீடம், ஆவுடையார், தூபக்கல் முதலியவற்றில் மணிநாகன் எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சக்தி பீடமாகக் கருதப்படும் நயினை நாகபூசணியம்மன் கோயிலானது இலங்கையின் வடபாகத்தில் நாற்புறமும் நீரால் சூழ்ந்த பிரதேசத்தில் எழில் மிகு சூழலில் காணப்படுகின்றது. நாகவழிபாடானது இலங்கையில் ஓங்கி இருந்தமைக்கு ஆதாரமாக இது விளங்குகின்றது. இந்த



திருக்கேதீச்சரம்

ஆலயத்தின் தல விருட்சம் வன்னி மரம் ஆகும். அத்துடன் இந்த ஆலயத்தின் தீர்த்தம் சித்தாமிர்த புஷ்கரணி ஆகும். இந்த ஆலயத்தில் மகோற்சவமானது பதினைந்து நாட்கள் இடம்பெறுவதுடன்ஆனிபூரணையைத்தீர்த்தநாளாகக்கொண்டு இடம்பெறும் இந்த நாளில் எழில்மிகு கோலத்தில் அம்பாள் தெப்பத்தில் தீர்தமாடுவார். நித்தமும் அன்னதானம் இடம்பெறுகின்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயமானது ஆரியசக்கரவர்திகளின் காலத்திற்குட்பட்ட ஆலயமாகும். இலங்கையை பரராஜசேகரன் ஆண்ட வேளையில் கோட்டை இராச்சியமன்னனானசெண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்து வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்த காலத்தில் செண்பகப் பெருமாள் அவர்கள் நல்லூர்கந்தசுவாமிகோயிலை நிறுவினார். நல்லூரை நடுநாயகமாகக் கொண்டு நாற்புறமும் கோயில்களை நிறுவினார். வடக்கே சட்டநாதர் கோயில் கிழக்கே வெயிலுகந்த விநாயகர் ஆலயம் மேற்கே வீரமாகாளி அம்மன் ஆலயம் தெற்கே கைலாசநாதர் கோயில் என அமைத்தார். இந்தியாவில் யமுனா நதியின் புண்ணிய தீர்தத்தைக் கொண்டு வந்து தீர்த்தத்தில் கரைத்து யமுனாரி என பெயரிட்டார்.

போர்துக்கேயர்காலத்தில்சைவக்கோயில்கள்அழிக்கப்பட்டு மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் ரகுநாத மாப்பண்ண



முன்னேச்சரம்

முதலியரால் மீளபுனருத்தாரணம் செய்யப்பட்டது. இந்த



வீரமாகாளி அம்மன் கோயில்

ஆலயமானது சுற்றுலாப் பயணிகள் பலரையும் கவர்ந்த ஆலயமாகத் திகழ்வதுடன் மூலமூர்தியாக வேல் நிறுவப்பட்ட ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஆவணி மாதத்தில் இருபத்தைந்து நாட்கள் இடம்பெறும். இவ்வாலயத்தில் நாற்திசையிலும் வாயில்கள் அமையப்பெற்றுள்ளது.

இலங்கையின் முதல் மன்னன் எனும் சிறப்பிற்குரிய இராவணன் வாழ்ந்த காலத்தில் அவன் தினமும் சிவபூசை செய்வதற்கு திருக்கோணேச்சர ஆலயத்திற்கு வந்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த ஆலயம் நாகர்களால் கட்டப்பட்ட ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தில் பெரிய நந்தித் திருவுருவம் காணப்படுவதுடன் அந்நந்தியின் செவியில் நாம் கூறுபவை நிறைவேறும் என்ற ஐதீகமும்



நயினை நாகபூசணி

அம்பாள். அவ் ஆலயத்தின் தீர்த்தம் பாபநாசம் ஆகும். ஈழத்தில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. அவ் ஆலயத்தில் இராமாயண இதிகாசத்துடன் நெருக்கமான தொடர்புடைய இராவணன் வெட்டைஅவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாலயமானது சிறப்பு மிகு ஆலயமாகத் திகழ்கிறது.

திருக்கேதீச்சர ஆலயமானது நாகர் காலத்து ஆலயமாகத் திகழ்கிறது. இவ் ஆலயமானது மாதோட்டத்தில் அமைந்துள்ளது. அவ் ஆலய இறைவன் பெயர் கேதீச்சர நாதர், இறைவி பெயர் கௌரி அம்பாள் ஆகும். 'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி' எனும் சிறப்புடன் அழைக்கப்படும் பாலாவித் தீர்த்தம் காணப்படுகின்றது. ஆறுமுக நாவலர் இவ் ஆலயத்தின் சிறப்புப் பற்றிக் கூறியுள்ளார். 'மாதோட்டத்தில் ஒரு தேன் பொந்து ஒன்று உள்ளது' என சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் திருவெம்பாவை விரதம் சிறப்பிற்குரியது. இவ் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் சிதம்பரத்தின் பூசை வழிபாடுகளை ஒத்திருக்கும் ஆருத்ரா தரிசனம் மற்றும் நடேசரபிஷேகம் என்பன சிறப்பிற்குரியன.

கதிர்காமத்திற்குப் பல பக்தர்கள் பாதயாத்திரையாக சென்று இறைவனைத் தரிசிப்பர். இவ் ஆலயத்தில் வாய் கட்டி பூசை செய்யும் மரபு இன்றும் உள்ளது. அவ் ஆலயத்தை மருவி வள்ளியம்மன் கோயிலும் காணப்படுகின்றது. ஈழத்தின் பல பகுதிகளிலும் புளியம்பொக்கனை, சேனையூர், நவாலி, செம்பியன்பற்று முதலான இடங்களில் நாக கோயில்கள் அமைந்துள்ளன. வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலானது பெண் தெய்வங்களுக்கான ஆலயங்களில் ஒன்றாகும். கண்ணகி மதுரையை எரித்து கோபம் தணிப்பதற்காக இலங்கையில் பத்து இடங்களில் வந்திருந்ததாகக் கூறப்படுகின்றன. கண்ணகி அம்மனின் வழிபாடு பற்றிக் கூறும் நூலாக பத்தாசிகள் அமைகின்றன. கண்ணகி பத்தாவதாக வந்து தங்கியிருந்த ஆலயமே இவ்வாலயமாகும்.

பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலயமானது ஒரு விஷ்ணு கோவிலாகும். இவ்வாலயத்தின் தலவிருட்சம் நொச்சி அகும். இவ் ஆலயத்தில் வரலட்சமி விரதம், ஏகாதசி முதலியன சிறப்பிற்குரியன. இவ் ஆலயத்தில் வருடாந்தம் இரண்டு மகோற்சவங்கள் இடம் பெறும். சிவபூமி என அழைக்கப்படும் இவ் ஈழமானது பெரும் மதிப்பிற்கும், சிறப்பிற்கும் உரியதாகும். சைவ ஆலயங்கள் பல விளங்கும் பூமியாக இவ்விடம் விளங்குகிறது. 'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

**துளசிகா தீபன்**




பொன்னாலை வரதராஜப் பெருமாள்


பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
தமிழர் இருப்பு
பொருளாதார அபிவிருத்தி
கௌரி காப்பு
1. ஐம்பதுவீத பெண்கள் பங்களிப்பு
2. வெளிப்படைத்தன்மை
3. மனநல பாதுகாப்பு
4. காணியுரிமை
5. விவசாய மறுமலர்ச்சி
6. போதைவஸ்து ஒழிப்பு
7. கல்வி மேம்பாடு
8. இளம் தொழின் முயற்சியாளருக்கான உதவித்தொகை வழங்குதல்
9. மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்
10. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு
11. திரைப்படத்துறை மீள் உருவாக்கம்
12. பதனிடப்பட்ட உணவு வகைகள் உற்பத்தி ஏற்றுமதியை அதிகரித்தல்
13. சூழல் பாதுகாப்பு மீள் சுழற்சி திட்டம்
14. பெண்கள், சிறுவர், முதியோர் பாதுகாப்பு திட்டங்கள்
15. தகவல் தொழிநுட்ப பூங்கா உருவாக்கம்
16. சுற்றுலாத்துறை அபிவிருத்தி
17. சமூகவலைத்தள பாதுகாப்பு
18. கூட்டுறவுச்சங்கங்களின் வகிபாகத்தை பலப்படுத்தல்
19. மீனவர்களின் நிரந்தர வாழ்வாதார உரிமத்தைப் பாதுகாத்தல்
20. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைதலுக்கான உறுதிப்பாடு
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9




# ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் மு.பொன்னம்பலம் காலமானார்



ஈழத்தின் முதுபெரும் கவிஞரும் எழுத்தாளருமானமு.பொன்னம்பலம் (மு.பொ) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

மறைந்த எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் சகோதரரான மு.பொ. 1939 இல் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் பிறந்தார். இவர் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகள் என பலவற்றை எழுதி, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் ஆவார். 1968இல் வெளியான 'அது' கவிதைத் தொகுதியே இவரது முதல் நூலாகும்.

அகவெளிச் சமிக்ஞைகள், விடுதலையும் புதிய எல்லைகளும், பேரியல்பின் சிற்றொலிகள், யதார்த்தமும் ஆத்மார்த்தமும், கடலும் கரையும், நோயில் இருத்தல், திறனாய்வு சார்ந்த பார்வைகள், பொறியில் அகப்பட்ட தேசம், சூத்திரர் வருகை, விசாரம், திறனாய்வின் புதிய திசைகள், முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை முதலான நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டார்.

எழுத்தாளர்மு.பொன்னம்பலத்தின் மறைவுஈழத்துஇலக்கியத்துறைக்கே பேரிழப்பாக கருதப்படுகிறது. (05)

# சிறுப்பிட்டியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கு பகுதியில் கடந்த 4 ஆம் திகதி குளவிக்கொட்டுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி மேற்கு பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் கேதீஸ்வரன் (வயது - 35) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் தனது வாகனத்தில் நித்திரையில் இருந்தபோது குளவி கொட்டியுள்ளது. வலி தாங்கமுடியாமல் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இளைஞர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சடலம் உடல்கூற்று சோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தனர் அரச கால்நடை வைத்திய அதிகாரிகள்



வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனை வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் புதன்கிழமை சந்தித்திருந்தனர்.

குறித்த சந்திப்பில் வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்க தலைவர் வைத்தியர் ஆ.முரளிதாஸ், செயலாளர் வைத்தியர் எஸ்.சுகிர்தன், உபதலைவர் வைத்தியர் எஸ்.கிருபானந்தகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கால்நடைப் பண்ணையாளர்களுக்கு உச்ச பட்ச சேவை வழங்குவதற்கு தடையாகவுள்ள பல இடர்பாடுகள் தொடர்பாக சங்கத்தினர் ஆளுநருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். முக்கியமாக விலங்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான மருந்துகள் இன்மையும் அது தொடர்பான பொருத்தமான பொறிமுறை இன்மை தொடர்பாகவும் வாகன பற்றாக்குறை மற்றும் சாரதிகள் இன்மை தொடர்பாகவும் கால்நடை வைத்தியர்களின் இடமாற்ற சபையில் சங்கத்தின் உறுதியான பிரசன்னத்தின் அவசியம் மற்றும் கால்நடைகளுக்கு வழங்கும் தீவணங்களின் தரத்தின் உறுதிப்பாடு தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் கால்நடை வைத்தியர்களும் மாகாணம் முழுவதும் நடைமுறைப்படுத்தும்சேவைகள்தொடர்பாகவும்சட்டவிரோதசிகிச்சையாளர்களால் பண்ணையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை வைத்தியர்களின் பற்றாக்குறை மற்றும் பற்றாக்குறையாக உள்ள ஏனைய ஊழியர்களின் தேவைப்பாடு தொடர்பாகவும் விளங்கப்படுத்தப்பட்டதுடன் வினைத்திறனான கால்நடை வைத்திய சேவையை வழங்குவதன் மூலம் பண்ணையாளர்களின் அத்தியாவசிய தேவைகள் நிறைவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாதகமாக பதிலளித்த ஆளுனர் வேதநாயகன், உடனடியாக செய்யக் கூடியவற்றை செய்வதாகவும் ஏனையவற்றை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்க்க முனைவதாகவும் உறுதியளித்துள்ளார். (05)

# மன்னார் நீதிமன்றத்தில் பெண்ணிடம் லஞ்சம்பெற்ற சிறை அலுவலர் கைது

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் கடந்த 5 ஆம் திகதி மன்னார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிவான் முன் னிலையில்ஆஜர்படுத்தியபோதுகுறித்தசிறைச்சாலை உத்தியோகத்தரை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில்வைக்கநீதவான்உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது –

கடந்த 5 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலை அலுவலர்மன்னார்நீதிவான்நீதிமன்றில்கடமைக்காக வந்துள்ளார்.

குறித்த சிறைச்சாலை அலுவலர், மன்னார் நீதிமன்ற தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை பார்வையிடுவதற்காக சென்ற பெண் ஒருவரிடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரை பார்வையிடுவதற்காக 1,000 ரூபா பணத்தை பலவந்தமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் குறித்த சிறைச்சாலை அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணினால் அடையாளம் காண்பிக்கப்பட்ட நிலையில் குறித்த சிறைச்சாலை அலுவலர் நீதிவான் நீதிமன்றில் வைத்து கைதுசெய்து விசாரணைகளின் பின்னர் கடந்த 5 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், குறித்த சிறைச்சாலை அலுவலரை வெள்ளிக்கிமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (05)

# வெளிநாட்டு மதுபான போத்தல்கள் சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, புறக்கோட்டை பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மதுபானபோத்தல்கள்மற்றும்சிகரட்டுகளுடன்சந்தேக நபர் ஒருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

புறக்கோட்டைபொலிஸாருக்குக்கிடைத்ததகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 210 மதுபான போத்தல்கள் மற்றும் 50 ஆயிரம் சிகரட்டுக்கள் அடங்கிய 250 சிகரெட்டு காட்டுன்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகைளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2024இல் வெளியிடப்பெற்றது